TRICHY

# முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - ஜூலை 2019

## பதினோன்றாம் வகுப்பு

பதிவு எண் | | | | | | |

நேரம்: 1.30 மணி

## தமிழ்

மதிப்பெண்கள்: 50

**I. பலவுள் தெரிக:** **12×1=12**

1) பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.
அ) முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்
ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்
இ) சு. வில்வரத்தினம் - ஆறாம் திணை
ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் எழுத்து மொழியும்

2) பாயிரம் இல்லது ............. அன்றே.
அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை

3) பொருத்தமான இலக்கிய வடிவம் எது?
அ) ஏதிலிக் குருவிகள் - புதுக்கவிதை ஆ) திருமலை முருகன் பள்ளு - சிறுகதை
இ) யானை டாக்டர் - இலக்கியம் ஈ) ஐங்குறுநூறு - குறும்புதினம்

4) உலகச் சிட்டுக்குருவிகள் தினம்
அ) மார்ச் 20 ஆ) ஜூன் 20 இ) டிசம்பர் 20 ஈ) அக்டோபர் 20

5) சிற்றிலக்கியங்களின் வகைகள்
அ) 76 ஆ) 18 இ) 96 ஈ) 30

6) வாய்க்காலின் மதகுகளிடையே கட்டப்பட்ட சங்கிலியில் மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த பறவை
அ) நாரை ஆ) உள்ளான் இ) காகம் ஈ) கொக்கு

7) அதிக நாள்கள் வாழும் விலங்கு
அ) யானை ஆ) சிங்கம் இ) புலி ஈ) காண்டாமிருகம்

8) யானைக்குக் கொடுக்கும் மயக்க மருந்தின் அளவு எதனை வைத்து தீர்மானிக்கப்படுகிறது?
அ) நிறம் ஆ) எடை இ) நடக்கும் வேகம் ஈ) உயரம்

9) சொற்களின் இடையில் ஒரே மெய்யெழுத்து அடுத்தடுத்து வருவது ............ எனப்படும்.
அ) மெய்ம்மயக்கம் ஆ) உடனிலை மெய்ம்மயக்கம்
இ) வேற்றுநிலை மெய்ம்மயக்கம் ஈ) ஈரொற்று மெய்ம்மயக்கம்

10) இனவெழுத்துகளுக்கு எடுத்துக்காட்டு
அ) அம்மா ஆ) உள்ளம் இ) செல்வம் ஈ) பண்டம்

11) நீலகிரியில் உள்ள தோடர் இனத்தவர் பால் .............. கொட்டில்களைப் புனித இடமாகக் கருதினர்.
அ) எருமை ஆ) பசு இ) ஆடு ஈ) குதிரை

12) கடையெழு வள்ளல்கள் எழுவரும் .............. பகுதிகளின் தலைவர்களாக விளங்கினர்.
அ) காடு ஆ) கடல் இ) மலை ஈ) வயல்

**II. குறுவினா: எவையேனும் மூன்றனுக்கு விடை எழுதுக.** **3×2=6**

13) பேச்சுமொழி, எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது. ஏன்?

14) பாயிரம் என்றால் என்ன?

15) தமிழ்நாட்டின் மாநிலமரம் - சிறுகுறிப்பு வரைக.

16) ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?

17) காவடிச்சிந்து என்பது யாது?

**III. மொழிப்பயிற்சி, இலக்கணப்பயிற்சி எவையேனும் மூன்றனுக்கு விடையளி:** **3×2=6**

18) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:**

அ) வாயொலி ஆ) பூஞ்சோலை

19) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:**

அ) வைத்தார் ஆ) அலர்ந்து

20) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:**

அ) தங்கை ஆ) வைகை

21) **தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக:**

நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலைத் தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை

**IV. சிறுவினா:** **2×4=8**

23) தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து - விளக்குக.

**(அல்லது)**

புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்களைக் குறிப்பிடுக.

24) வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? உம் கருத்தை எழுதுக.

**(அல்லது)**

"மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது" - விவரிக்க.

**V. பெருவினா: (எவையேனும் இரண்டனுக்கு விடை தருக)** **2×6=12**

25) நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

26) சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே - விளக்குக.

27) தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ. முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?

28) **அடிமாறாமல் எழுதுக:** **4+2=6**

"ஏடு தொடக்கி வைத்து" எனத் தொடங்கும் "யுகத்தின் பாடல்", "இலன்" என முடியும் குறள்.

---------